**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 61-2024**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | நித்ய செல்வகுமாரி<br>PW3 Cross | Date : | 03.10.2025 |
| Husband Name | : | ஜெயசீலன் | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. எனக்கு எதிராக கார்த்திகேயன் என்பவர் இந்நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலை மோசடி வழக்கில் இந்த வழக்கின் புகார்தாரருக்கு ஆஜராகிய வழக்கறிஞர் தான் எனக்காக மேற்படி வழக்கில் ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் ஞானசேகரனும் வழக்கறிஞரும் அழைத்தன் பேரில் தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அன்னவாசல் கிராமம் எனக்கும், எனது கணவருக்கும் சொந்த ஊர் இல்லை என்றால் சரிதான். தற்போது அன்னவாசல் கிராமத்தில் நானும் எனது கணவரும் வசித்து வரவில்லை என்றால் சரிதான்.

2. 3 வது எதிரி எனது கணவரை துரத்தி சென்றதகாவும், 8வது எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என்னிடம் மேற்படி ஆவணங்கள் இல்லை.

3. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றாலும், அதனால் தான் என்னிடம் புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கடந்த 08.09.2020ல் அன்னவாசல் கிராம அங்கன்வாடி ஊழியராக பணிபுரிந்த

போது அங்கன் வாடி பொருட்களை எனது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தியதாக என் மீது அங்கன்வாடி ஊட்டசத்து மைய அலுவலரிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு பிரச்சனை நடந்ததால் பிரபாகரன் எனக்கு எதிராக புகார் கொடுத்தார். பிரபாகரன் புகாரை கொடுக்கவில்லை என்றாலும், அன்னவாசல் கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து தான் புகார் கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல.

4. இந்த வழக்கில் புகார்தாரர் ஞானசேகரன் பொது பாதையை அடைத்து பிரச்சனை செய்தார் என்றாலும், எனது வழக்கறிஞர் கூறியதன் பேரில் நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எதிரிகள் எந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.